



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (29.8.2025) தலைமைச் செயலகத்தில், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் ஓய்வு பெறுவதையொட்டியும், தீ ஆணையத்தின் (Fire Commission) தலைவராக நியமிக்கப்பட்டதை யொட்டியும் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (29.8.2025) தலைமைச் செயலகத்தில், முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா, மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர்/இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளதை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நெல் கொள்முதல் விலையை உயர்த்தி உத்தரவு !

### சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,545/- பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/-

# நெல் கொள்முதல் நிலையங்களில் செப்டம்பர் 1 முதல் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது!

### விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஆக.31-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் வாழும் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதற்காக விவசாயிகள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன்களைக் காப்பதே திராவிட மாடல் அரசின் உன்னத நோக்கங்களில் ஒன்று என்று விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறார்கள்.**

ஒன்றிய அரசு 2025-2026ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விலையை தற்போது நிர்ணயித்துள்ளது. ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையைவிட விவசாயிகளுக்கு கூடுதல் விலை வழங்கும் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தமிழ்நாட்டின் நலம் காத்து வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு இந்த ஆண்டில் நிர்ணயம் செய்துள்ள சன்னரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,389 என்பதை ரூ.2,545 என உயர்த்தியுள்ளார்கள்.

அதே போல, பொதுரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,369 என்பதை ரூ.2,500 என உயர்த்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலையில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 1.9.2025 முதல் 31.8.2026 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும். இதற்கான முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவு 29.8.2025 அன்று அரசாணையாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி, இந்த ஆண்டில் விவசாயிகளிடமிருந்து மொத்தம் 42 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படும். இதில் சன்ன ரக நெல் 30 இலட்சம் மெட்ரிக் டன். பொதுரக நெல் 12 இலட்சம் மெட்ரிக் டன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் 2024 2025 நெல் கொள்முதல் பருவத்தில் 47.97 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 51 மாத கால ஆட்சியில் இதுவரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 44 ஆயிரத்து 777 கோடியே 83 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் திராவிட மாடல் அரசு விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஊக்கத் தொகை மட்டும் 2 ஆயிரத்து 31 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரும்பாடுபட்டு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லில் ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்ற உன்னத இலட்சியத்துடன் கொள்முதல் செய்யப்படும் நெல்லை திறந்த வெளியில் வைத்திடக் கூடாது என்பதற்காக 827 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்களைக் கட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விவசாயிகளின் வாழ்வாரத்தை உயர்த்தும் வகையில் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நெல் கொள்முதல் விலையை தற்போது உயர்த்தியுள்ளது விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி இருவரும் நேற்று (30.8.2025) நேரில் சந்தித்து நெல் கொள்முதல் விலையை உயர்த்தி தந்து விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.

### அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்பு!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*கிருஷ்ணகிரி, ஆக. 31-*

*கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைபடியும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான இளம் தலைவர் அவர்கள் ஆலோசனைப்படியும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகளுடனான காணொலி காட்சி வாயிலான ஆலோசனைக் கூட்டம் இன்று (31.8.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10,00 மணிக்கு சட்டமன்ற தொகுதி வாரியாக கீழ்க்கண்ட இடங்*



*களில் நடைபெற உள்ளது.*

*இந்த கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஐந்து வாக்குச்சாவடிகளுக்கு ஒரு பொறுப்பாளர்கள் என நியமிக்கப் பட்டவர்கள் வாக்குச் சாவடி முகவர்கள் BLA 2, தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய மகளிர் அணி நிர்வாகிகள், ஒன்றிய மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் அனைவரும் இந்த காணொலி காட்சி வாயிலான கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*கூட்டம் நடைபெறும் இடம் : பர்கூர் சட்டமன்ற தொகுதி MKS மஹால் திருப்பத்தூர் மெயின் ரோடு போச்சம்பள்ளி ,ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி ராமச்சந்திர மஹால் சாமல்பட்டி பைபாஸ், கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி DCM மஹால் குப்பம்சாலை, அரசு கலைக் கல்லூரி அருகில் கிருஷ்ணகிரி.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### சென்னை – கோட்டூர்புரம் – அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில்

# ‘ஸ்பேஸ் கிட்ஸ்’ அமைப்பின் சார்பில் ‘ஸ்பேஸ் திருவிழா’!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு – வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்!

**சென்னை, ஆக. 31-**

**சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்டரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின் சார்பில் நடைபெற்ற ஸ்பேஸ் திருவிழாவில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.**

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-

ஸ்பேஸ் திருவிழா போட்டியில் ஜம்மு காஷ்மீர் முதல் தமிழ்நாடு வரையில் இருந்து சுமார் 1200 குழந்தைகள் கலந்து கொண்டனர், இது ஒரு பெரிய நிகழ்வாக இருந்தது. இதன் இயக்குநர் மற்றும் பிரான்சிலிருந்து விருந்தினர்கள் வந்துள்ளனர், மேலும் தொடர்புடைய அதிகாரிகள் வருகை புரிந்துள்ளனர். இது எங்களுக்கு ஒரு பெரிய மரியாதை. தமிழ்நாட்டு குழந்தைகள் மற்றும் தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக உள்ள பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநில குழந்தைகள் அனைவரும் வெற்றி பெற்றுள்ளனர். ஒரு மதிப்புமிக்க நிகழ்வில் ஒரு அறிவுசார் நிகழ்வில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அனைவருக்குமான ஐஐடி திட்டத்தில், ஐஐடி எம்-ல் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 354 குழந்தைகள் சேர்ந்துள்ளனர், இந்த ஆண்டு 28 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இந்தக் குழந்தைகள் ஒரு தேர்வு எழுதி, அவர்களை மதிப்பீடு செய்து, தமிழ்நாடு அரசு மற்றும் ஐஐடி எம் இணைந்து கொண்டு வரப்பட்டுள்ள படிப்பில் (Course) சேருகிறார்கள். ஐஐடி எம் வளாகத்தில் ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த மாணவர்கள் படிக்கும் போது பொறியியல் கல்லூரிக்குப் போனாலும், இங்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், ஆன்லைன் மூலம் வகுப்பில் பயில்கிறார்கள். இதனால் என்ன பயன்? ஐஐடி-களுக்குக் கொடுக்கக்கூடிய அதே சான்றிதழ் அந்தக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமில்லாமல், மூன்று வருடப் படிப்பு எனில் கலை, அறிவியல், டிப்ளமோ விற்கு இணையான சான்றிதமும், நான்கு வருடப் படிப்பு எனில் பிடெக் படிப்பிற்கு இணையான சான்றிதமும் வழங்கப்படும். இவை ஐ.ஐ.டி. சான்றிதமுக்கு சமமானது, ஐஐடி முன்னாள் மாணவர் அட்டையும் அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படும். மேலும், வணிகவியல் படிக்கக்கூடிய குழந்தைகள் இங்கே படித்து, தேர்வு எழுதி, இந்த வகையான படிப்பில் சேர்ந்தால், பொறியியல் பட்டதாரிகளாகக் கருதப்படுவார்கள்.

முதலமைச்சர் , “Shoot for the moon, even if you fail, you will land up in some stars” என்று சொன்னது போல IIT என்று நினைக்கும் நம் குழந்தைகள் இங்கே வருகிறார்கள், IIT இருக்கிறதா? நானும் அதில் இருக்கிறேன், நான் நுழைந்து விட்டேன். இன்று, அரசாங்கமும் IITயும் ஒரு பாடத்திட்டத்தின் மூலம் இணைந்து செயல்படுகின்றன. நான் பொறியியல் படித்து வருகிறேன், நான் ஒரு பொறியியல் பட்டதாரி என்று பெருமைப்படும் வகையில் அமைந்துள்ளது. இந்தக் குழந்தைகள் எங்காவது வேலைக்குச் சென்றாலும், நான் பொறியியலும் படித்திருக்கிறேன், IIT-யில் B.Tech படித்திருக்கிறேன், அதற்கான சான்றிதழ் உள்ளது என்பது கூடுதல் மதிப்பு அடையும். மாணவர்களில் பலர், ஐஐடியினை அண்ணாந்து பார்க்கும்போது “இங்க நுழைய முடியுமா?” எனக் கேட்பார்கள் அவர்களுக்காகவே ”அனைவருக்கும் ஐஐடி” என்ற திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

புராணக் காரணத்தின் அடிப்படையில் ஒரு உதாரணத்தினை சொல்கிறார்கள் சிலர். நாம் தூய அறிவியல் பற்றி பேசுகிறோம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 51A (H)-இல் ஒவ்வொரு குடிமகனுக்குள்ளும் ஒரு அறிவியல் மனப்பான்மையை உருவாக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் அறிவியல் சார்ந்து கல்வி கற்றுத் தருகிறோம், புராணம் சார்ந்து கல்வி கற்றுத் தருவதாக சொல்கிறார்கள். மற்றவர்களின் நம்பிக்கையில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. எதுவாக இருந்தாலும், நமக்கு நிரூபிக்கப்பட்ட தரவு தேவை. நிரூபிக்கப்பட்ட மாதிரி இருந்தால் மட்டுமே, இன்றைய காலகட்டத்தில், குழந்தைகள் நம்புவார்கள் எனத் தெரிவித்தார்.




# தி.மு.க.
# இளைஞர் அணி

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 2–இல் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியிலும், மண்டலம் 9–இல் திருமங்கலம், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | பூவிருந்தவல்லி | எம்.கே.என்.பேலஸ், சென்னை–திருவள்ளூர் சாலை, வேப்பம்பட்டு. |
| 05.09.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | திருமங்கலம் | கொடி மஹால், திருமங்கலம், மதுரை. |
| 06.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | கன்னியாகுமரி | ஐ.எம்.ஏ.மஹால் ஆசிரமம், சுசீந்திரம். |
| | மாலை 4.00 மணி | குளச்சல் | பிஸ்மி ஆடிட்டோரியம், பள்ளிவாசல் சாலை, குளச்சல். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-08-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி தலைமையிலும் – தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன் முன்னிலையிலும் நேற்று முன்தினம் 29.08.2025 அன்று சி.ஐ.டி. நகரில் அமைந்துள்ள வீட்டு வசதி வாரியத் தலைமை அலுவலகத்தில் வீட்டு வசதிவாரிய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் (பொறுப்பு) பா.கணேசன் நில எடுப்பு விடுவிப்புக்காக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற அதிகாரிகள் சி.முனியநாதன், வி.பழனிக்குமார், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் பாலசுப்ரமணியன், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) ப.சைலேந்தரன், தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன் உள்ளிட்ட வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.